# பாகபாத்திய விடுதலை பத்திரம்

2026ம் வருடம் மார்ச் மாதம் ம் தேதி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி - 620 010, உக்கடை, அரியமங்கலம், முதல் தெரு, கதவு எண். 1/15-ல் வசித்து வரும் திரு. ஸ்டாலின் அவர்களின் மனைவி திருமதி. S. ரோஸ்லின் -1 (ஆதார் எண். 9791 9589 7332),

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி - 620 013, திருவெறும்பூர், கக்கன் காலனி, கதவு எண். 125/3-ல் வசித்து வரும் திரு. ஸ்டாலின் அவர்களின் குமாரத்தியும், திரு. ஜோயல் அவர்களின் மனைவியுமான திருமதி. S. கேத்லின் ஆரோக்கிய ஜெனிபர் -2 (ஆதார் எண். 5281 8752 6743)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி -620 019, எல்லக்குடி, வேதாத்ரி நகர், பாலாஜி நகர் எதிரில், 3வது தெரு, கதவு எண். 43-ல் வசித்து வரும் திரு. ஸ்டாலின் அவர்களின் குமாரத்தியும், திரு. பிரபு அவர்களின் மனைவியுமான திருமதி. S. ஜூலியட் ரீனா - 3 (ஆதார் எண். 7748 6483 1203),

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி - 620010, உக்கடை, அரியமங்கலம், முதல் தெரு, கதவு எண். 1/15-ல் வசித்து வரும் திரு. ஸ்டாலின் அவர்களின் குமாரர் திரு. S. மார்லின் வெங்கடேஷ் -4 (ஆதார் எண். 9391 9855 9963) ஆகிய தங்கள் நால்வருக்கும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி-620102, சோமரசம்பேட்டை, நாச்சிக்குறிச்சி, குபேரன் நகர் கிழக்கு, கதவு எண். 71-ல் வசித்து வரும் திரு. ஜோசப் அவர்களின் குமாரர் திரு. J. ராபின்சன் -1 (ஆதார் எண். 6375 7002 2318)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி 620023, காஜாமலை மெயின்ரோடு, கதவு எண். 80ல் வசித்து வரும் திரு. ஜோசப் அவர்களின் குமாரத்தியும், திரு. சிங்கராயர் அவர்களின் மனைவியுமான திருமதி. அமலோற்பவ குளோரி -2 (ஆதார் எண். 5717 4437 5803)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி - 620013, திருவெறும்பூர், கக்கன் காலனி, ஆரோக்கிய இல்லம், கதவு எண். 116/125-ல் வசித்து வரும் திரு. ஜோசப் அவர்களின் குமாரத்தியும், திரு. கிறிஸ்ட் ஆனந்தராஜ் அவர்களின் மனைவியுமான திருமதி. சகாய ரூபி -3 (ஆதார் எண். 2652 1661 2088) ஆகிய நாங்கள் மூவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் என்னவென்றால்,

நாங்கள் நால்வரும், எங்களில் 1 முதல் 3 வரை உள்ள நபர்களின் உடன்பிறந்த சகோதரரான திரு. ஸ்டாலின் அவர்களின் வாரிசுகள் ஆவீர்கள்.

இதனடியிற்கண்ட சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது எங்களில் 1 முதல் 3 வரை உள்ள நபர்களுக்கு தகப்பனாரும், எங்கள் உடன்பிறந்த சகோதரரும், தங்களில் 1வது நபரின் கணவரான திரு. ஸ்டாலின் அவர்களுக்கு தகப்பனாரும், தங்களில் 2 முதல் 4 வரையுள்ள நபர்களுக்கு தாத்தாவுமான திரு. ஜோசப் அவர்கள், அவருடைய சொந்த தொகைகளைக் கொண்டு, 21.03.1980-ம் தேதியில் திரு. M.S. ஹபிபுல்லா அவர்களிடமிருந்து காலிமனையாக கிரையமாக வாங்கி, மேற்படி பத்திரம் திருச்சி 3ம் எண் இணைச் சார்பதிவகத்தில் 1 புத்தகம் 1452 தொகுதி 391 முதல் 393 வரை பக்கங்களில் 1980-ம் வருடத்திய 709ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரப்படி, திரு. ஜோசப் அவர்களுக்கு பாத்தியப்பட்டு, மேற்படி காலிமனையில் அவரது சொந்த தொகைகளைக் கொண்டு கெட்டிமெத்தை, மேல்மெத்தை வீடு வகையறாக் கட்டிக் கொண்டும், மேற்படி சொத்திற்குண்டான வரி வகையறாக்களை ஏற்படுத்திக் கொண்டும், செலுத்திக் கொண்டும், ஆண்டு அனுபவித்து வந்து, திரு. ஜோசப் அவர்கள்

எவ்வித ஏற்பாடுகளும் செய்து வைக்காத நிலையில் 27.06.2015-ந் தேதியில் காலமாவதற்கு முன்பே, அவரது மனைவி ஜெயஜெபஸ்தியம்மாள் அவர்கள் 08.07.2012ந் தேதியில் காலமான நிலையில், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட வாரிசு சான்று ப.மு.எண். 6569/2015 (ஆ1) நாள் : 16.12.2015-ந் தேதியில் வழங்கிய வாரிசு சான்றின்படி ராபின்சன்-1, ஸ்டாலின்-2, அமலோற்பவ குளோரி -3, சகாய ரூபி -4 ஆகிய நால்வர் மட்டுமே வாரிசுகள் என்ற அடிப்படையிலும், இதில் திரு. ஸ்டாலின் அவர்கள் 07.06.2023-ந் தேதியில் காலமான பிறகு, திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய வாரிசுச் சான்று எண். TN-7202306262650 நாள்: 11.07.2023-ந் தேதியில் வழங்கிய வாரிசு சான்றின்படி ரோஸ்லின்-1, கேத்லின் ஆரோக்கிய ஜெனிபர் -2, ஜூலியட் ரீனா-3, மார்லின் வெங்கடேஷ்-4 ஆகிய நால்வர் மட்டுமே வாரிசுகள் என்ற அடிப்படையிலும்,

திரு. ஜோசப் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் திரு. ஜோசப் அவர்கள் அவரது குமாரத்திகளான அமலோற்பவ குளோரி, சகாய ரூபி ஆகிய இருவருக்கும் செட்டில்மெண்ட் செய்து கொடுத்தது போக மீதமுள்ள அடியிற்கண்ட சொத்தானது நம் அனைவருக்கும் பொதுவில் பொதுவில் பாத்தியப்பட்டு, நம் அனைவரும் பொதுவில் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வருகின்ற சொத்தாகும்.

இவ்விதம் நம் அனைவருக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களில் எங்களில் 1, 2, 3வது நபர்களுக்கு 4ல் 3 பங்கு சொத்தும், திரு. ஸ்டாலின் அவர்களின் வாரிசுகளான தங்களில் 1, 2, 3, 4வது நபர்களுக்கு 4ல் 1 பங்கு சொத்தும் பாத்தியப்பட்டு, நாம் அனைவரும் பொதுவில் ஆண்டு அனுபவித்து வந்த நிலையில், தற்போது மேற்படி சொத்தில் நாம் அனைவரும் சேர்ந்து அனுபவிக்க விரும்பாததாலும், நம்மில் யாரேனும் ஒருவர் சொத்தை அடைந்து கொள்வது நலம் என்று கருதியும்,

எங்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்ட பொதுவில் பிரிவினை இல்லாத 4ல் 3 பங்கு சொத்தின் பாத்திய உரிமையினை தங்கள் நால்வருக்கும் நாளது தேதியில் விடுதலை செய்து கொடுத்து, மேற்படி விடுதலைக்கு பிரதி பிரயோஜனமாக அதாவது தாங்கள் நால்வரும், எங்கள் 1 முதல் 3 வரை உள்ள நபர்களின் உடன்பிறந்த சகோதரரான திரு. ஸ்டாலின் அவர்களின் வாரிசுதாரர்கள் என்ற முறையிலும் உங்களிடமிருந்து எந்தவிதமான பிரதி பிரயோஜன தொகை ஏதும் பெற்றுக் கொள்ளாமல், இந்த பாகபாத்திய விடுதலைப் பத்திரம் மூலம் மேற்படி முழு சொத்தில் எங்களுக்குள் பொதுவில் பிரிவினையில்லாத 4ல் 3 பங்கு பாகபாத்திய உரிமையினை இதன் மூலம் தங்களுக்கு விடுதலை செய்து கொடுத்து விட்டோம். **மேற்படி சொத்தின் வடக்கு பகுதி கீழ்புறத்தில் உள்ள பொதுபாத்திய சொத்தாக உபயோகப்படுத்திக் கொண்டு வந்த தென்வடல் கிழமேல் ஜாதியடி இருபுறமும் 20.9 சதுரடியும், தென்வடல் ஜாதியடி 20.6 சதுரடி உள்ள சொத்தை பொறுத்து நாம் அனைவரும் ஒருமித்த மனத்தோடு சேர்ந்து சரிபாதியாக பிரித்து, அதாவது கிழமேல் ஜாதியடி இருபுறமும் 20.9 சதுரடியும், தென்வடல் ஜாதியடி 10.3 சதுரடியாகவும், தென்புறம் தங்கள் நால்வருக்கும், மீதி கிழமேல் ஜாதியடி இருபுறமும் 20.9 சதுரடியும், தென்வடல் ஜாதியடி 10.3 சதுரடியாகவும், வடபுறம் எங்களில் 2வது நபருக்கும் பிரித்துக் கொள்வதென சமரசமாக பேசிக் கொண்டோம். இதற்காக தங்கள் நால்வருக்கோ, எங்களில் 1 மற்றும் 3வது நபருக்கோ எந்தவிதமான பிரதிபிரயோஜனம் எதுவும் கொடுக்கப்படாமல் பிரித்துக் கொண்ட சொத்தாகும்.**

இனி அடியிற்கண்ட சொத்தைப் பொறுத்து இனிமேல் எங்களுக்கோ, எங்களது வாரிசுகளுக்கோ, எந்தவிதமான பாத்தியமோ, சம்மந்தமோ, பின்தொடர்ச்சியோ கிடையாது. அவ்வாறு நாங்களோ, எங்களது வாரிசுகளோ, விட்டுக் கொடுக்கும்படி ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின்படி சொத்தும் சேர்த்து இந்த பாகபாத்திய விடுதலைப் பத்திரத்திற்கு கட்டுப்பட்டதாகும்.

இதற்கு ஆதரவாக திரு. ஜோசப் அவர்கள் கிரையம் பெற்ற 709/1980ம் எண் நகல் கிரையப் பத்திரத்தையும், மற்றும் இச்சொத்து சம்மந்தப்பட்ட இதர தஸ்தாவேஜ்களையும், மற்றும் இறப்பு மற்றும் வாரிசுச் சான்றுகளின் ஜெராக்ஸ் காப்பியும் நாங்கள் உங்கள் வசம் கொடுத்திருக்கின்றோம்.

இந்தப்படி சம்மதித்து எங்களுடைய முழுமன சம்மதத்தின் பேரில் தங்களுக்கு இந்த பாகபாத்திய விடுதலைப் பத்திரம் தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கின்றோம்.

## <u>சொத்து விவரம்</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி டவுன், திருச்சி 3ம் எண் இணைச் சார்பதிவகத்தைச் சேர்ந்த, திருச்சி வட்டம், உக்கடை அரியமங்கலம் கிராமம், பழைய சர்வே எண். 282/10A/1-க்கு தற்காலம் UDR-படி சர்வே எண். 25/21-ல் கட்டுப்பட்ட ஏக். 0.42 சென்டில் கட்டுப்பட்ட 2400 சதுரடி கொண்ட மனையில் திரு. ஜோசப் அவர்களால் செட்டில்மெண்ட் செய்தது போக மீதமுள்ள சொத்து வீடாக இருந்து ஏற்கனவே ஷை வீடு இடிக்கப்பட்டு தற்போது காலிமனையாக உள்ள சொத்தில் மேற்சொன்ன வழக்கின்படி கிடைக்கப் பெற்ற 29 சதுரடியையும் சேர்த்து, ஆகக் கூடுதல் 881 சதுரடிகள் (5 தாக்குகள்) கொண்ட காலிமனை சொத்திற்கு நான்கெல்லைகள் மற்றும் அளவுகள் விவரம் :

வடக்கில் : அமலோற்பவ குளோரி அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட 346 சதுரடி மற்றும் 213 சதுரடி சொத்துக்கள்

தெற்கில்: அமலோற்பவ குளோரி, சகாய ரூபி ஆகிய இருவரும் சுரேஷ்குமார் அவர்களுக்கு விற்பனை செய்த சொத்து

கிழக்கில் : தென்வடல் ரோடு

மேற்கில் : பெரியசாமி மகன் துரைராஜ் பிள்ளை வீடு

### <u>இந்நான்கெல்லைக்குள்பட்ட தாக்கு -1 :</u>

கிழமேல் ஜாதியடி இருபுறமும் 40 அடி, தென்வடல் ஜாதியடி இருபுறமும் 11 அடி, ஆகக் கூடுதல் 440 சதுரடி கொண்ட மனை 1வது தாக்கு,

**<u>1வது தாக்கின் வடமேல்புறம் 2வது தாக்கு:</u>**

கிழமேல் ஜாதியடி இருபுறமும் 19 ¼ அடி, தென்வடல் ஜாதியடி இருபுறமும் 5 ½ அடி, ஆகக் கூடுதல் 105.875 சதுரடிக்கு முழுமையில் 106 சதுரடி கொண்ட மனை 2வது தாக்கு,

**<u>2வது தாக்கின் வடபுறம் 3வது தாக்கு :</u>**

கிழமேல் ஜாதியடி இருபுறமும் 19¼ அடி, தென்வடல் ஜாதியடி இருபுறமும் 1½ அடி, ஆகக் கூடுதல் 28.875 சதுரடிக்கு முழுமையில் 29 சதுரடி கொண்ட மனை 3வது தாக்கு,

**<u>1வது தாக்கின் வடகீழ்புறம் 4வது தாக்கு :</u>**

கிழமேல் ஜாதியடி இருபுறமும் 20.9 அடி தென்வடல் ஜாதியடி இருபுறமும் 4.6 அடி, ஆகக் கூடுதல் 96.14 சதுரடி கொண்ட மனை 4வது தாக்கு.

**<u>4வது தாக்கின் வடகீழ்புறம் 5வது தாக்கு:</u>**

கிழமேல் ஜாதியடி இருபுறமும் 20¾ அடி, தென்வடல் ஜாதியடி இருபுறமும் 10.3 அடி, ஆகக் கூடுதல் 214 சதுரடி கொண்ட மனை 5வது தாக்கு, (அனைவரும் சேர்ந்து மனம் ஒத்து பொது பாத்தியத்தில் இருந்த சொத்தில் இருபுறமும் கிழமேல் ஜாதியடி 20¾ தென்வடல் ஜாதியடி 20.6 இதனை சரிபாதியாக பிரிக்கப்பட்டதில் S.ரோஸ்லின் அவர்களுக்கு தென்புறம், அமலோற்பவ குளோரிக்கும் வடபுறமும் பிரித்துக் கொண்டோம்).

ஆக நான்கு தாக்குகளின் கூடுதல் 881 சதுரடிகளுக்கு 81.84 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையும், மேற்படி மனைக்குண்டான சகல மாமூல் வழிநடை பாதை பாத்தியங்கள் சகல ஈஸ்மெண்ட் பாத்தியங்கள் உள்பட உள்ள பூராச் சொத்தில் எங்களுக்குண்டான பங்கு சொத்து 4ல் 3 பங்கு சொத்து இந்த பாகபாத்திய விடுதலைப் பத்திரத்திற்கு கட்டுப்பட்டது.

குறிப்பு:-

இதில் அமலோற்பவ குளோரி அவர்களுக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்ட சொத்தில் எழுதிக் கொடுக்கும் 29 சதுரடிக்கு 7% முத்திரை தீர்வையும், 2% பதிவு கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சொத்து UDR-படி சர்வே எண். 25/21-ல் கட்டுப்பட்டது.

மேற்படி சொத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கணக்குகளின்படி புதிய வார்டு R, புதிய பிளாக் 7, புதிய டி.எஸ்.நெ. 11 ஆகும்.

மேற்படி சொத்தில் கட்டிடங்களோ காம்பவுண்ட் சுவரோ, மின் இணைப்போ ஏதுமில்லை.

மேற்படி சொத்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குள்பட்ட உக்கடை அரியமங்கலம் கிராமம், போலீஸ் ஸ்டேசன் தெருவில் அமைந்துள்ளது.

மேற்படி சொத்தின் மதிப்பு ரூ. 6,70,000/-

| | |
|---|---|
| மேற்படி பூராச் சொத்தின் மதிப்பு | ரூ. 6,70,000/- |
| எங்களுக்குண்டான 4ல் 3 பங்கு சொத்தின் மதிப்பு | ரூ. 5,02,500/- |

சாட்சிகள்:

1.

2.